[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 28

1. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பக்தர்கள் வசதிக்காக, பக்தர்கள் தங்கும் விடுதி 30 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நிதி வசதி இல்லாத 1,000 கிராமப்புறத் திருக்கோயில்களில், நடப்பாண்டில் திருப்பணி மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள, திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம், 10 கோடி ரூபாய் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள 1,000 திருக்கோயில்களில் நடப்பாண்டில் திருப்பணிகள் மேற்கொள்ள, திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடி ரூபாய் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) வேலூர் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைத்தல், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்துதல், காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய மாணவர் படை பயிற்சி வளாகம் அமைத்தல் மற்றும் தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் இறகுப் பந்து அகாடமி அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. உடற்கல்வி மற்றும் விளையாட்டு ஆகிய இரண்டும், உடற்திறனை வளர்ப்பதோடு, திடமான மன வலிமையையும், சகோதர மனப்பான்மையையும், சமூக நல்லிணக்கத்தையும் உருவாக்கிட பெரிதும் உதவுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, விளையாட்டு வளர்ச்சிக்கென சிறப்பான விளையாட்டு கட்டமைப்பு வசதிகள்,

2018 ஜுன் 28] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

ஊக்க உதவித் திட்டங்கள், முறைப்படுத்தப்பட்ட பயிற்சிகள் என பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இதனை முன்னெடுத்துச் செல்ல, பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. வேலூர் மாவட்டத்தில், 400 மீட்டர் தடகள ஓடுபாதை, பார்வையாளர் மாடம், நிருவாக அலுவலகம், வளைகோல் பந்து, கூடைப் பந்து, கபடி, கோ–கோ, இறகுப் பந்து, டென்னிஸ் ஆகியவற்றிற்கான ஆடுகளங்கள், நீச்சல் குளம், உடற்பயிற்சிக் கூடம் மற்றும் இதர விளையாட்டு வசதிகளைக் கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகம் 17 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. பல்வேறு விளையாட்டு வீரர்களின் திறன்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தகுந்த முறையில் பயிற்சிகள் அளித்து, சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கும் வகையில், ‘பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டம்’ செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் குறைந்தபட்சம் 5 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உட்பட, 50 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கும், வெளிநாடுகளில் சென்று சிறப்புப் பயிற்சி மேற்கொள்வதற்கும் மற்றும் போட்டிகளில் கலந்துகொள்வதற்கும், மானியமாக, தேவையின் அடிப்படையில் தலா 10 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபாய் செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நீர்ப்பெயர் கிராமத்தில் தேசிய மாணவர் படையினருக்குப் பயிற்சி வளாகம் அமைக்க 2.02 ஹெக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் அணிவகுப்பு பயிற்சி மைதானம், தடை தாண்டுதல் பயிற்சி நிலையம், 25 மீட்டர் மற்றும் 50 மீட்டர் தூரம் சுடக் கூடிய துப்பாக்கி சுடும் தளம் ஆகியவற்றைக் கொண்ட தேசிய மாணவர் படை பயிற்சி வளாகம், 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பயிற்சி வளாகத்தில் ஒரே சமயத்தில் 600 மாணவர்கள் வீதம், ஆண்டொன்றுக்கு சுமார் 18,000 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 28 முற்பகல் 11–15

4. இறகுப் பந்தாட்டப் போட்டியில் சர்வதேச அளவில் பதக்கங்கள் வெல்லக்கூடிய திறமைமிக்க விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். அவர்களை ஊக்குவிக்கும் வகையில், ஓர் இறகுப் பந்து அகாடமி தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில், 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பல்வேறு விளையாட்டு அறிவியல் ஆய்வுகளைப் பயன்படுத்தி வீரர்களின் திறமைகளை அடையாளம் கண்டு சர்வதேச போட்டிச் சூழல்களுக்கேற்றவாறு அவர்களைத் தயார் செய்ய இந்த அகாடமி உதவும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சுற்றுலா, பண்பாடு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழால் வளர்ந்தது பல கட்சிகள், இயக்கங்கள். ஆனால், தமிழை வளர்த்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே என்ற வரலாற்றுப் பதிவிற்கிணங்க, (குறுக்கீடுகள்) புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் தமிழன்னைக்காக உருவாக்கிய கட்டமைப்புகளான உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம், உலகத் தமிழ் மாநாடுகள் இவற்றின் வரிசையில் 'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்ற (மேசையைத் தட்டும் ஒலி) பாவேந்தரின் வரிகளுக்கேற்ப, அருந்தமிழ் வளர்த்திடும் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஏற்கெனவே* Harvard University*–ல் தமிழ் இருக்கை, தமிழ் வளர் மையம், தமிழ் பண்பாட்டு மையம், இளந்தமிழர் இலக்கியப் பட்டறை, உலகத் தமிழறிஞர்களுக்கு 65 தகைசால் விருதுகள், குறிப்பாக சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்,*